# தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி நிலவிய காலங்களில் மகளிர் உரிமை நிறுவனங்களில் உருவான எதிர்மறையான விளைவுகளைத் தணிப்பதற்கான 'பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம்' (WVL-SL) செயற்றிட்டத்தின் பங்களிப்புகள்.



கொவிட்-19 காலப்பகுதியில் ஆய்வுக்கும் மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றிய ஊழியர்களிடம் சுத்தப்படுத்தும் உபகரணங்களை கையளித்தல் (மட்டக்களப்பு மாவட்டம்)

2020 முதல் 2022 வரையான காலப்பகுதி இலங்கையில் குழப்பம் மிக்க காலமாக இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், கோவிட்-19 தொற்றானது வரவிருக்கின்ற அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளைக் தீவிரப்படுத்தும், 1948 சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மோசமான நெருக்கடியாகும். இவையனைத்தும் மனிதநேய நெருக்கடியின் உச்சத்தை அடைந்தன. தொற்று மற்றும் அடுத்தடுத்த பொருளாதார நெருக்கடியிலிருந்து தோன்றும் பல்வேறு வகையான பிரச்சனைகள் தீவிரமானவை. சில சமயங்களில் எதிர்வுகூறுவது சிரமமானது. சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் கோணங்களை ஊடறுத்துச் செல்பவை. இலங்கை பல கோவிட்-19 அலைகளுக்கும் மாற்றங்களுக்கும் முகங் கொடுத்ததுடன் பல தடவைகள் முடக்கப்பட்டது. அத்துடன் எரிபொருள் தட்டுப்பாடு, 13 மணிநேர மின்வெட்டு, வானளவு உயர்ந்த உணவுப் பணவீக்கம், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், மருந்துத் தட்டுப்பாடு, அத்துடன் உணவு நெருக்கடியைத் தூண்டும் பொருளாதார நெருக்கடியால் பெரும் பிரச்சனைக்கு உள்ளானது.

இவ்வாறான சூழ்நிலையில் செயற்படுகின்ற போது குறைபாடுகளை எதிர்நோக்கிய போதும் இலங்கையில் காணப்படும் மகளிர் உரிமை நிறுவனங்கள் (WROக்கள்) பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை (WVL-SL) திட்டத்தின் பங்காளர்கள் மற்றும் பலர் தமது பணியில் விடாமுயற்சியுடன், தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியால் பெண்களும்

பெண்பிள்ளைகளும் முகங்கொடுக்கும் பிரச்சனைகளுக்குப் பதில் வழங்கியதுடன் தொற்றுக் காலத்தின் முன்னிலையில் அவர்கள் தொடங்கிய பணியை தொடர்ந்து மேற்கொண்டனர்.

நெகிழ்ச்சியான, அனுசரிப்பு, மற்றும் பதிலளிக்கக் கூடிய முகாமைத்துவ வடிவத்தைக் கொண்டுள்ள WVL-SL ஆனது தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் போது திட்ட அமுலாக்கத்திலும் நிர்வாகத்திலும் மகளிர் உரிமை நிறுவனப் பங்காளர்களுக்கு வழிகாட்டுவதிலும் உதவுவதிலும் முக்கிய பங்கு வகித்தது. மகளிர் உரிமை நிறுவனங்கள்க்குப் பதிலளிப்பதற்காக WVL-SL எடுத்துக் கொண்ட தனித்தனியான சம்பவ அணுகுமுறையானது, தனித்தனியான மகளிர் உரிமை நிறுவனப் பங்காளர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க WVL-SL செயற்றிட்டத்திற்கு இடமளித்ததுடன் குறிப்பாக தொற்று மற்றும் தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடிகள் மகளிர் உரிமை நிறுவனங்களில் ஏற்படுத்திய நுணுக்கமான விளைவுகளை எதிர்கொள்வதில் மிகப் பயனுள்ளதாக அமைந்தது. உதாரணமாக கோவிட்-19 தொற்று குறைவாக அல்லது கூடுதலாகக் காணப்படுகின்ற வலயங்களில் அமைந்திருந்தால், அவற்றின் புவியியல் அமைவிடம், இலத்திரனியல் கருவிகள் இல்லாத சில மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு திட்டத்தை அமுல்படுத்துவதற்கான இணையத்தள அணுகுமுறைகளுக்குச் செல்வதில் சிரமம் காணப்பட்டதுடன் சில மகளிர் உரிமை நிறுவனங்களால் நாடு முடக்கப்பட்ட காலங்களில் பயனாளிகளை அணுகுவதில் சிரமங்கள் இருந்தன. குறிப்பாக பயனாளிகளிடம் இலத்திரனியல் கருவிகளை அணுக முடியாதிருந்த காரணத்தால் மகளிர் உரிமை நிறுவனங்களால் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெண்ணியக் கொள்கைகளுக்கு ஏற்ப, WVL-SL செயற்றிட்டத்தை அமுல்ப்படுத்துவதன் மூலம் மகளிர் உரிமை நிறுவனங்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சனைகள், சவால்கள் மற்றும் அபாயங்கள் முற்றாகப் புரிந்து கொள்ளப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன், தொற்று மற்றும் பொருளதார நெருக்கடிகள் தொடர்பில் அவர்களுடைய பயனாளிகள் முகங் கொடுக்கின்ற பிரச்சனைகளை தீர்ப்பதை இலக்காகக் கொண்ட நடைமுறைப்படுத்தல்களும் (துரிதமான பதில்கள் அல்லது வளர்ந்து வரும் பிரச்சனைகளுக்கு ஏற்ப பல ஆண்டு நிதியுதவித் திட்டங்களை மாற்றியமைத்தல் போன்றவை) மகளிர் உரிமை நிறுவனங்கள் தங்களுக்குள்ளே எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் (திறன் விருத்தித் தேவைகள் போன்றவை). ஒட்டுமொத்தமாக WVL-SL - இலங்கை செயற்றிட்டத்திற்கு வளர்ந்து வருகின்ற சூழலில் மகளிர் உரிமை நிறுவனங்களை வழிநடத்துவது ஒரு சவாலாக இருந்த போதும் அது பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை மற்றும் மகளிர் உரிமை நிறுவனங்கள் தமது பணியை அமுல்ப்படுத்துவதற்கு புதிய அணுகுமுறைகளையும் வழிமுறைகளையும் ஆராய்வதற்கு இடமளித்தது.

## மாறுகின்ற சூழல்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு மகளிர் உரிமை நிறுவனங்களின் நிறுவன ரீதியான ஆற்றல்களை பலப்படுத்துதல்.

### கோவிட்- 19ன் போது மகளிர் உரிமை நிறுவனங்களின் செயற்பாட்டுத் திறன்களை பலப்படுத்தல்.

பெண்களின் பிரச்சனைகள், வலுப்படுத்தல், மற்றும் பெண்ணுரிமைகள் என்பவற்றில் தமது அடிமட்டப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள விரும்புகின்ற அனைத்து மகளிர் உரிமை நிறுவனங்கள் மீதும் உடனடியான திறன் விருத்தி இடையீடுகளைக் கோருகின்ற சூழ்நிலையை கோவிட் - 19 தொற்று ஏற்படுத்தியது.

உபகரணங்களை வழங்குவதன் மூலம் நிறுவன ரீதியான திறன்களை வலுப்படுத்தும் வகையில் பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை செயற்றிட்டமானது பலவருட நிதியைப்பெறும் (MYF) சகல பங்காளர்களுக்கும் 9,000 CAD மதிப்புள்ள சுகாதார உபகரணங்களையும் பொருட்களையும் வழங்கியது. மகளிர் உரிமை நிறுவனங்கள் அடிமட்ட

மக்களுடன் பணயாற்றுவதால் பலர் முதலில் பதிலளிப்பவர்களாகச் செயற்படுகின்றதன் விளைவாக திட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சமூக உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுவது அவசியமாகின்றது. இதன் காரணமாக பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்கின்ற அதேவேளை குறிப்பாக ‘‘அதிக ஆபத்து’’ கோவிட்-19 வலயங்களில் பணியாற்றுகின்ற மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு அவர்கள் பணியாற்றிய சமூகங்களுடன் தொடர்ச்சியாகச் செயற்படுவதற்கான சுகாதார உபகரணங்களும் பொருட்களும் வழங்கப்பட்டமை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. அத்துடன் WVL-SL வழங்கப்பட்ட பொருட்கள் ஊனமுற்றவர்கள் பாவிக்கக்கூடியதாகவும் உள்ளன என்பதையும் உறுதிப்படுத்தியது.

மேலதிகமாக WVL-SL ஒவ்வொரு மகளிர் உரிமை நிறுவன பங்குதாரர் மகளிர் உரிமை நிறுவனங்களுக்கும் மடிக் கணினி ஒன்றையும் டொங்கிள் ஒன்றுடன் (மொத்தமாக 26) மேலதிக ஒன்சைட் தொழில்நுட்ப சேவையுடன் 3 வருட உத்தரவாதமளித்து வழங்கியது. கோவிட்-19 உடன் தொடர்புடைய முடக்கங்களும் பயண எல்லைகள் வரையறைகளும் தளர்த்தப்பட்டதுடன் மகளிர் உரிமை நிறுவனங்கள் இயன்றளவு இணையத் தளத்தின் ஊடாக நிகழ்ச்சிகளை நடத்துவதைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதால் இம் முதலீடு மென்மேலும் அவசியமானது என்பது நிரூபனமாகியது. மகளிர் உரிமை நிறுவனங்கள் தமது பணியில் தொழில்நுட்பத்தை இணைத்துக் கொள்ளவும் இது அனுமதித்தது. மடிக் கணினிகளும் இணையத்தள இணைப்புகளும் காரணமாக பல மகளிர் உரிமை நிறுவனங்களின் விளைதிறன் அதிகரித்ததாகப் பல மகளிர் உரிமை நிறுவனங்கள் அறிக்கையிட்டன. சிலருக்கு இதுவே அமைப்புக்குச் சொந்தமான முதல் மடிக் கணினியாகவும் இருந்தது.

சில மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு திட்டங்களை அமுல்ப்படுத்துகின்ற போது இந்த பௌதீக ரீதியான முறையிலிருந்து மெய்நிகர்(virtual) முறைக்கு மாறுவதில் சிரமங்கள் காணப்பட்டமை நிரூபனமானது. இதற்குப் பதிலளிக்கின்ற வகையில், பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம் இணையத் தளங்களின் பயன்பாடு (மற்றும் ஒழுக்க விதிகள்) பற்றிய குறிப்பாக மைக்றோசொப்.்.ட் குழுமங்கள் மற்றும் சூம் தளங்களிலான திறன்விருத்தி அமர்வொன்று நடத்தப்பட்டது. இத் திறன்விருத்தியானது மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு கூட்டங்களை நடத்தவும், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், வலையமைப்பு மற்றும் சில சந்தர்ப்பங்களில் இணையத்தளத்திலான பயிற்சி அமர்வுகளை நடத்தவும் உதவியது.



தலைப்பு 26 பலவருட நிதியினை பெற்ற மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு பெண்கள் குரலும் தலைமைத்துவமும் - இலங்கை செயற்திட்டத்தினால் லப்டொப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அனைத்து மகளிர் உரிமை நிறுவனங்களுக்கும் பொருத்தமாகக் கூடிய மெய்நிகர் தளத்தைப் பயன்படுத்தும் இயலளவைக் கட்டியெழுப்பும் அமர்வுக்கு மேலதிகமாக மாறுபட்ட சூழலில் புத்தாக்கத்திற்கும், செயற்றிட்ட இடையீடுகளைத் தழுவுவதற்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மகளிர் உரிமை நிறுவனங்களுக்கென தனித் தனியான ஆற்றல்களையும் கொள்திறன்களையும் கட்டியெழுப்புவது அவசியம் என்பதை WVL-SL இனங் கண்டுள்ளது. WVL-SL குறிப்பிட்ட நிறுவனத்தின் திறனை வலுப்படுத்துகின்ற கூறுகளை புதிய MYF செயற்றிட்ட கட்டங்களில் ஒருங்கிணைக்கும் யோசனையை முன்வைத்தது. உதாரணமாக காலியில் பெண்கள் மத்திய நிலையம் நடமாடும் இதழியல் தொடர்பில் ஆதரித்து வாதாடுவதற்கான திறனை ஒருங்கிணைத்தது. அனுராதபுரத்தில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகள் சங்கம் (AKASA) தனது சமூக ஊடக இருப்பை முன்னிலைப்படுத்துவதற்காக சமூக ஊடக ஆதரித்து வாதாடுதல் தொடர்பிலான பயிற்சியொன்றை அதன் பணிக்குழுவிற்காக ஏற்பாடு செய்தது. காலியில் உள்ள கிராமிய மகளிர் சங்கம் (RWF) அதன் பணிக்குழுவினதும் தன்னார்வலர்களினதும் சமூக ஊடகங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்ததுடன், அது நிலைபேறான ஒரு படிமுறையாக மாற்று வருவாய் வழிகளைக் கண்டுபிடிக்கும் ஒரு பகுதியையும் அதில் உள்ளடக்கியது. இது பணிக்குழுவினரை இலக்கு வைக்காமல் செயற்றிட்டங்களுக்கு ஆதரவளிக்கின்ற மகளிர் உரிமை நிறுவனங்களால் வழமையாக அனுபவிக்கப்படுகின்ற மரபுரீதியான அனுசரணையாளரின் நன்கொடைகளிலிருந்து விலகிச் சென்ற ஒரு அணுகுமுறையாகும். பொருளாதார நெருக்கடியின் பெறுபேறாக தோன்றும் நிறுவன ரீதியான திறன் விருத்திகளைக் கட்டியெழுப்பப்பட வேண்டிய தேவையை தீர்ப்பதற்காக MYF மானியச் சுற்றின் 3வது கட்டம் வரை இது தொடர்ந்தது.

எவ்வாறாயினும் WVL-SL தேவையான சந்தர்ப்பங்களில் ஆதரவைத் தொடர்ந்ததுடன் குறிப்பாக செயற்றிட்டங்களை வகுத்தல் மற்றும் வடிவமைத்தல் அடிப்படையில் பெரும்பாலான பங்குதாரர்கள் சூழ்நிலைகளைக் அனுசரிப்பதற்கான உதவிகளைக் கோரினர். இதற்காக WVL-SL ஒவ்வொரு மகளிர் உரிமை நிறுவனங்களுடனும் நேரடி அமர்வுகளை நடத்தியது. (ஒவ்வொருவருடனும் சராசரியாக எட்டு மணிநேரக் கலந்துரையாடல்கள்) திறன்விருத்தியானது பங்காளர்கள் அவர்களுடைய பணியை விமர்சன ரீதியாக மீளாய்வு செய்யவும் கோவிட் - 19 சூழலில் புதிய அணுகுமுறைகளை வடிவமைக்கவும் உதவியதெனினும், அது பெண்களின் உரிமைகள் மற்றும் வலுப்படுத்தல் மீதான அவர்களின் வலுவான அர்ப்பணிப்பைப் பிரதிபலித்தது.

### பொருளாதார நெருக்கடியின் போது மகளிர் உரிமை நிறுவனங்களின் இயலளவை பலப்படுத்தல்

பொருளாதார நீதிக்கான பெண்ணியக் கூட்டமைப்பு என்ற வெளிவாரி வளவாளர்களுடன், பொருளாதார நெருக்கடியின் பெண்ணியக் கண்ணோட்டங்கள் மீதான அறிவுப் பகிர்வு அமர்வொன்று மகளிர் உரிமை நிறுவனங்களுடன் நடத்தப்பட்டது. பொருளாதார நெருக்கடி தொடர்பில் காணப்படும் (பெரும்பாலும் அதிக கனமான வார்த்தைகள்- jargons ) அதிகமான தகவல்களைக் குறைத்துக் கொள்வதற்கும், இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியவாறு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய சூழல் மற்றும் காரணிகள் தொடர்பான அடிப்படை விளக்கம் அளிக்கப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் பயனாக பாதிப்புக்குள்ளாகும் மக்கள்/சமூகங்கள் முகங் கொடுக்கின்ற குறிப்பிட்ட பிரச்சனைகள் தொடர்பில் வளவாளர்கள் தொடர்ந்து பேசினர். அடிப்படைத் தேவைகளுக்கான அணுகல், பெருகிவரும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (GBV) பெண் தலைமைத்துவத்திலான குடும்பங்கள் சந்திக்கின்ற பிரச்சனைகள், முறைசாராத் துறையிலுள்ள பெண்கள், விவாகரத்துப் பெற்ற பெண்கள் மற்றும் பராமரிப்பு தொடர்பான பிரச்சனைகள், அத்துடன் ஊதியமற்ற பராமரிப்புத் தொழில் என்ற விடயங்களைத் தழுவி பெண்கள் முகங் கொடுக்கும் பிரச்சனைகள், தொடர்பில் நீண்ட நேரக் கலந்துரையாடல் இடம்பெற்றது. பல மகளிர் உரிமை நிறுவனங்களால் உறுதிப்படுத்தப்பட்ட சமூகங்களிலிருந்து தோன்றிய கதைகள் வாயிலாக உணவுப் பாதுகாப்பும் முக்கிய தலைப்பாக கலந்துரையாடப்பட்டது. சிறுவர்களின் கல்வி மற்றும்

போக்குவரத்துக்கான அணுகல் தொடர்பான பிரச்சனைகள் குறித்தும் இங்கே பேசப்பட்டது. ஒட்டுமொத்தமாக அறிவுப் பகிர்வு அமர்வானது நேர்மறையான பின்னூட்டல்களைக் கொண்டிருந்தது. பொருளாதார நெருக்கடியைப் புரிந்து கொள்வதில் இந்த அமர்வு பலருக்குப் பயனுள்ளதாக அமைந்தது எனத் தெரிய வந்தது. ஆனால் மிக முக்கியமாக, பலவருட நிதி சுற்றின் 3ம் கட்டத்திற்கான செயற்றிட்ட முன்மொழிவுகளில் பொருளாதார நெருக்கடி தொடர்பான சிக்கல்கள் தீர்க்கப்படுவதை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை மகளிர் உரிமை நிறுவனங்ககளால் இணைக்க முடிந்தது.

### மாறுபடும் சூழல்களுக்கு ஏற்றவாறு செயற்றிட்ட இடையீடுகளையும் மூலோபாயங்களையும் மாற்றியமைப்பதில் மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்தல்வளித்தல்.

கோவிட்-19ன் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக செயற்றிட்ட இடையீடுகளைத் தகவமைத்தலும், மூலோபாயங்களை மாற்றியமைத்தலும்

வலைத்தளங்களின் பாவனை தொடர்பான திறன் விருத்தியானது அவர்களின் செயற்பாடுகளை வலைத்தளங்களில் மாற்றியமைத்துக் கொள்ள விரும்பும் மகளிர் உரிமை நிறுவனங்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது. காலியிலுள்ள பெண்கள் மத்திய நிலையம் மற்றும் கம்பஹாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிலாளர்கள் தொழிற் சங்கம் (TGCWU) அவர்களுடைய இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகள், மற்றும் தொழில்நுட்ப ஆர்வலர்களின் சமூக ஊடகங்களுக்கான அணுகலைக் கண்டறிந்து ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் (EPZ) பணியாற்றும் அவர்களின் நேரடிப் பயனாளிகளுக்கான ஆதரித்து வாதாடுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மெய்நிகர் சமூக ஊடகங்கள் மற்றும் வட்ஸ்அப் வலையமைப்புகளுக்கு மாற்றியமைத்தனர்.

எவ்வாறாயினும் அமுலாக்கத் திட்டச் செயற்பாடுகளை அனைத்து அமைப்புகளாலும் இணையத்தள முறையில் மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கவில்லை. நுவரெலியாவில் அமைந்திருக்கும், நலன்புரிக் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பயிற்சிகளுக்கான சங்கமும் (SWEAT) சமூக நலன்புரி மன்றமும் (SWM) பெருந்தோட்டத் துறைச் சமூகங்களில் பால் நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான ஆதரித்து வாதாடலையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டன. குறைந்த தொழில்நுட்ப ரீதியான அணுகலைக் கொண்டுள்ள பெருமளவில் பொருளாதார, சமூக, மற்றும் அரசியல் ரீதியாகப் பின்தங்கிய சமூகங்களாகவே இச்சமூகங்கள் காணப்படுகின்றன. எனவே SWEAT மற்றும் SWM ஆகிய இரண்டு அமைப்புகளும், இணையத் தள முறையில் தமது செயற்பாடுகளை மாற்றுவது பொருத்தமற்றது எனவும் அதற்குப் பதிலாக WVL-SL யின் ஆதரவுடன், இயன்றளவு சிறு குழுக்களுடன் பணியாற்றவோ அல்லது கோவிட்-19 காலப்பகுதியில் காணப்பட்ட பயணத் தடைகளின் போது இச்சமூகத்தினரை நெருக்கமாக அணுகக் கூடிய பங்குதாரர்களுடன் பணியாற்றுவது பொருத்தமானது என்பதையும் உணர்ந்து கொண்டன. பதுளையில் அமைந்துள்ள தேவை நாடும் மகளிர் (WIN) அமைப்பும் இதுபோன்ற பிரச்சனைக்கு முகங் கொடுத்து, தோட்டத் துறை முகாமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களான (தோட்டத்துறை மனிதவள அபிவிருத்தி நிதியம்) நலன்புரி உத்தியோகத்தர்கள், மருத்துவ தாதிகள், மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தோட்டத்துறையுடன் இணைத்து, தோட்டத்துறையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பில் பங்குதாரர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கத் திட்டமிட்டது.

நாடு முடக்கப்பட்டமை மற்றும் கோவிட்-19 உடன் தொடர்புடைய பயணத் தடைகள் தமது பயனாளிகளுடன் நெருங்கிப் பணியாற்றுவதில் மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியது. WVL-SL அமைப்பு மகளிர் உரிமை நிறுவனங்கள் அவற்றை மீளக் கட்டமைப்பதற்கான படிமுறைகளை எடுத்தது. கம்பஹாவில் அமைந்துள்ள ஸ்டான்ட் அப் மூவ்மன்ட் லங்கா (SUML) அமைப்பானது வர்த்தக ரீதியான பாலியல் தொழிலாளர் உரிமைகளுக்காக ஆதரித்து வாதாடுவதுடன் பொதுவாகப் பாலியல் தொழிலாளர்களுடன்

நெருக்கமாகப் பணியாற்றுகின்றது. எவ்வாறாயினும் நாடு முடக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், அவர்கள் பொதுவான இடங்களில் வாடிக்கையாளர்களை அணுகாத காரணத்தால் அவர்களைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. எனவே அவர்களின் ஆதரித்து வாதாடும் அணுகுமுறையை மீளக் கட்டமைத்ததுடன் அதற்குப் பதிலாக பாலியல் தொழிலாளர்களுக்கு சட்ட உதவிகளை வழங்குவதற்காக சட்டத்தரணிகளுடன் இணைந்து பணியாற்றியது.

செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில், WVL-SL செயற்றிட்டத்தால் நடத்தப்பட்ட அடிப்படை மற்றும் திறன் மதிப்பீட்டின் போது, பெரும்பாலான மகளிர் உரிமை நிறுவனங்களிடம் சான்று அடிப்படையிலான நிகழ்ச்சியாக்கம் தொடர்பிலான அறிவும் அனுபவமும் குறைவாகக் காணப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. கோவிட்-19 சூழ்நிலையானது WVL-SL செயற்றிட்டத்திற்கு மகளிர் உரிமை நிறுவனங்களின் பங்குதாரர்களை நடைமுறைச் சூழல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலான சிறிய அளவிலான ஆராய்ச்சிகள்/மதிப்பீடுகளைச் செய்விப்பதற்கு ஊக்குவிப்பதற்கான நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. உதாரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் (AWF) சமூகத்தில் பெண்கள் மீது கோவிட்-19 ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்த ஆய்வொன்றை நடத்தியது. காலியில் அமைந்துள்ள கிராமியப் பெண்கள் முன்னணி (RWF) சுற்றுலாத் துறையில் முறைசாராத் தொழில்முயற்சியாளர்கள் மீது கோவிட்-19 செலுத்திய தாக்கம் குறித்த மதிப்பீடொன்றை மேற்கொண்டது.

### பொருளாதார நெருக்கடியின் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் செயற்றிட்ட இடையீடுகளையும் மூலோபாயங்களையும் மாற்றியமைத்தல்

பெரும்பாலான மகளிர் உரிமை நிறுவனங்கள் தமது MYF மானியத்தின் தமது 1ம் 2ம் கட்டப் பணிகளின் தொடர்ச்சியாக 3ம் கட்டத்தை உருவாக்கியுள்ளன. எவ்வாறாயினும் WVL-SL யின் உதவியுடன், பொருளாதார நெருக்கடியின் மூலமான நேரடிப் பிரச்சனைகளிலிருந்து வெளிவரும் இடையீட்டுச் செயற்பாடுகளையும் இணைத்துக் கொண்டது. இது பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை செயற்றிட்டத்திற்கு மூலோபாயப் பால்நிலை நலன்களையும் தேவைகளையும் பொருளாதார நெருக்கடியைத் தாங்கும் வகையில் (வருவாய் ஈட்டும் முறைகள் வாயிலானவை போன்ற) நடைமுறை பால்நிலைத் தேவைகளில் பங்குதாரர்களின் கவனத்தை மாற்றுவதற்கு வாய்ப்பினை வழங்கியது. உதாரணமாக அம்பாறையிலுள்ள பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் (AWF) அம்பாறையில் வசிக்கும் ஒதுக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத் திறன்களையும் ஆற்றல்களையும் மேம்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் மூலோபாயத்தை நோக்கி நகர்ந்தது. பெண்கள் இலகுவாக அணுகக் கூடிய கைத்தொழிலாக பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கைத்தொழிலான கருவாடு விற்பனைக்கான உள்நாட்டுத் தேவையை மூலதனமாகக் கொண்டு பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் இவ்வொதுக்கப்பட்ட பெண்கள் மீனைக் காயவைப்பதற்கான தொழில்நுட்பத் திறனை வழங்குவதற்கான பயற்சி நிகழ்ச்சியொன்றை வடிவமைத்தது. பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கையின் பரிந்துரைகளுடன் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தால் பிரதான அரசாங்க நிறுவனங்களின் தொழில்நுட்ப வளவாளர்களைப் பயிற்சிக்காகத் தருவிக்கப்பட்டதுடன் அதன்மூலம் பெண்களுக்கு அவர்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், அவர்களின் பொருளாதார நிலைமைகள் பிரதிநிதித்துவம், மற்றும் தன்னம்பிக்கையைப் பலப்படுத்த உதவுகின்ற அறிவுக்கும் ஆற்றல்களுக்குமான பிரவேசத்தை மேம்படுத்தியது. WVL-SL செயற்றிட்டம் தரம் மற்றும் தரநிலைகள் பேணிச் செல்லப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களின் செயற்றிட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்குப் பொருத்தமான நிபுணர்களையும் வளவாளர்களையும் தேர்ந்தெடுப்பதற்கு பங்குதாரர்களை ஊக்குவிக்கின்றது.

WVL-SL பொருளாதார நெருக்கடியின் போது சான்று அடிப்படையிலான நிகழ்ச்சியாக்கத்தைத் தழுவுவதற்குப் மகளிர் உரிமை நிறுவனங்களுக்குத் தொடர்ச்சியான ஆதரவை வழங்கியது. MYFன் 3ம் கட்டம் தொடர்பில் பெண்கள் அபிவிருத்திக்கான நிலையம் (CWD) வட மாகாணத்தில் அமைந்துள்ள 3 மாவட்டங்களிலுள்ள கிராமியப் பெண்கள் மீது பொருளாதார



கருவாட்டினை செய்தலும் பொதியாக்குதலும் - திறமைகளை கட்டியெழுப்பும் வாழ்வாதார மாற்றுத் திட்டப் பயிற்சி பட்டறை - பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினால் நடாத்தப்பட்டது. (அம்பாறை மாவட்டம்)

நெருக்கடி செலுத்தும் தாக்கம் குறித்த ஆராய்ச்சியை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதுடன், சிறிய அளவிலான தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பொருளாதாரத் திறன் குறித்த பயிற்சி 90 பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியினால் தரச்சான்றுக்காக வடமாகாணத்தின் கிராமியப் பெண்கள் முகங் கொடுக்கின்ற சவால்களுக்கு பதிலளிப்பது தொடர்பில், பங்குதாரர்களுக்கு பரிந்துரைகளுடன் கூடிய தாக்க அறிக்கையொன்றை வரைவதற்காக யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் பால்நிலை தொடர்பான கல்வியியலாளர்களுடன் பெண்கள் அபிவிருத்திக்கான நிலையம் பணியாற்றுவதை முன்மொழிந்தது. பின்னர் அப்பரிந்துரைகள் யாழ்ப்பாணத்தின் அரச மற்றும் அரசசார்பற்ற பங்குதாரர்களிடம் சமர்ப்பிக்கப்படும். பெண்கள் அபிவிருத்திக்கான நிலையம் பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் சட்ட உதவிகளின் தரத்தைச் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கான மதிப்பீடொன்றையும் செய்யத் திட்டமிட்டுள்ளது.

பல மகளிர் உரிமை நிறுவனங்கள் உணவுப் பாதுகாப்புடன் பெண் தலைமையிலான குடும்பங்களை ஆதரிப்பது தொடர்பான இடையீடுகளையும் உள்ளடக்கின. இப்பணிகளில் சில, லோட்டஸ் சர்க்கிள் இமர்ஜன்சி நிதியத்தின் (கீழே விளக்கப்பட்டுள்ளது) நிதியுதவியுடன் 'இலங்கையின் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான பொருளாதார நிவாரணப் பொதி' எனப்படும் உடனடிப் பதிலளிப்புத் திட்டத்தில் கட்டியெழுப்பப்பட்டது. உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு பற்றிய அறிவை வளர்ப்பதற்காக வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கான திறனை விருத்தி செய்வதற்கு, மேலதிகமான உற்பத்தியை மாற்று வருவாய் வழியாக மாற்றியமைப்பதில் பெண்களின் திறன்களை உயர்த்துதல் என்பன இடையீடுகளில் உள்ளடக்கப்பட்டன. சில மகளிர் உரிமை நிறுவனங்கள் (சமூக நலன்புரி மன்றம் போன்ற) இயற்கைப் பசளை உற்பத்தியை திறமை வாய்ந்த பெண்களுக்கு மேலதிகமான ஒரு கூறாக உள்ளடக்கியதுடன் பயிற்சி நிகழ்வுகளில் உதவுவதற்கு கமத்தொழிற் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் போன்ற அரச அலுவலர்களுடன் தொடர்ந்தும் பணியாற்றுமாறு மகளிர் உரிமை நிறுவனங்கள் ஆலோசனை விடுத்தன.

குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பை வீட்டிலுள்ள பெண்களிடம் கையளிப்பதில் WVL-SL எச்சரிக்கையாக இருந்தது. இதனைக் குறைப்பதற் WVL-SL வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை தொடர்பான திறன்விருத்திப் பயிற்சிகளில் 18 வயதுக்கு மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஆண் அங்கத்தவர் ஒருவரை பெண் கட்டாயமாக அழைத்து வர வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தது. குடும்பத்தின் ஆண் உறுப்பினர் திறனை

வளர்த்துக் கொண்டு குடும்பத்தின் நலனுக்காக அர்த்தமுள்ள வகையில் பங்களிப்புச் செய்யக் கூடிய வயதில் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவே வயதின் தேவை இங்கு சேர்க்கப்பட்டது.

## வளர்ந்து வரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான மகளிர் உரிமை நிறுவனங்களின் நிதிக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல்

### கோவிட்-19க்குப் பதிலளிப்பதற்கான நிதி வழங்கும் முயற்சிகள்

உடனடி பதிலளிப்பு நிதியத்தின் மூலம், WVL-SL செயற்றிட்டம், கோவிட் காரணமாக எழும் பிரச்சனைகளைத் தீர்க்கின்ற ஆரம்ப முயற்சிகளைச் செயற்படுத்த மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு ஆதரவளித்தது. உதாரணமாக மகளிர் அபிவிருத்தி சம்மேளனம் (WDF) தனிமைப்படுத்தல் காலப்பகுதிகளில் வருமானமிழப்புகளும் வீட்டு வன்முறைகளும் தீவிரமடைந்ததையும் இனம் கண்டது. கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதன் பயனாக அன்றாட வருமானத்தை இழந்த குறை வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த 40 பெண்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களுடன் கோவிட்-19 தொடர்பான துண்டுப் பிரசுரங்களையும் அரசு மற்றும் அரச சார்பற்ற உதவி அமைப்புகளைத் தொடர்பு கொள்ளக் கூடிய தகவல்களையும் (பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான சேவைகளைத் தொடர்பு கொள்வது உள்ளிட்ட) வழங்கி உதவுமாறு கோரினர். அந்த 40 பெண்களும் அவர்களின் குடும்பங்களைப் பராமரிப்பதற்கு, அவர்களின் சுமையைக் குறைப்பதற்கு, மந்த போசாக்கிலிருந்து பாதுகாக்கப்படவும் தேவையான சந்தர்ப்பங்களில் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகலைப் பெற்றுக் கொள்வது தவிர்க்கப்பட முடியாதது என்பதாலேயே WVL-SL இவ்விடையீட்டுக்கு ஆதரவளித்தது. ‘நெருக்கடிக் காலங்களில் பெண்ணியத் தலைமைத்துவம்’ என்ற கருப்பொருளின் கீழ் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்வுக்கு வியர்வைத் துளிகள் கூட்டமைப்பு பகுதி ஒத்துழைப்பிற்கான நிதியைக் கோரியது.

### பொருளாதார நெருக்கடிக்குப் பதிலளிப்பதற்கான நிதி வழங்கும் முயற்சிகள்

மகளிர் உரிமை நிறுவனங்கள் பொருளாதார நெருக்கடியால் உருவாகின்ற அல்லது மோசமடைந்து வரும் பாதிக்கப்படக் கூடியதும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களினதும் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதில் அக்கறை காட்டி, மனிதநேய உதவிக்கான உடனடி பதில் வழங்கும் நிதியத்தை நாடியது. எவ்வாறாயினும், WVL-SL, பொருளாதார பிரச்சனைகளைத் தீர்ப்பதற்ான மனிதநேய உதவிகளுக்கான மகளிர் உரிமை நிறுவனங்களின் கோரிக்கைகள், உடனடி பதிலளிப்பு நிதியத்தின் நோக்கத்திற்கு நேரெதிரானது என உணர்ந்தது. மனிதநேய உதவிகள் உடனடி பதிலளிப்பு நிதியத்தின் ஒரு பகுதி மட்டுமே என்பதுடன், WVL-SL, நிதி மூலோபாயம் மற்றும்/அல்லது புத்தாக்க முன்முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்கான பகுதிகளுக்கு இத்தருணத்தில் மகளிர் உரிமை நிறுவனங்களால் முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பதை உணர்ந்தது. WVL-SL, குழுவானது, செயற்றிட்ட ஆலோசனைக் குழுவுடன் கலந்துரையாடிய பின்னர், பால்நிலைச் சமத்துவம், பெண் உரிமைகளை அனுபவித்தல் பெண்களை வலுப்படுத்தக் கூடிய மூலோபாய மற்றும் புத்தாக்க முயற்சிகளுக்கான ஆரம்பத்தை பரிசோதித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதற்காக உடனடிப் பதிலளிப்பு நிதியத்தின் மாதிரியை திருத்தியமைத்தது. ‘புத்தாக்க மானியம்’ (திருத்தத்திற்குப் பின்னர் இவ்வாறு அழைக்கப்பட்டது) பொருளாதார நெருக்கடி உட்பட (ஆனால் அதனுடன் மட்டுப்படாமல்) பல்வேறு தொனிப்பொருள் பகுதிகளின் கீழுள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படலாம். அத்துடன் WVL-SL திட்டத்தால் மகளிரி உரிமை அல்லாத நிறுவனங்களிடையேயும் பகிர்ந்தளிக்கப்பட்டது. மொனராகலை மாவட்டத்தில் உள்ள விகல்பனி தேசிய மகளிர் சம்மேளனம் (விகல்பனி) (புத்தாக்க மானியத்தைப் பெற்றுக் கொண்டவர்) பாரம்பரிய விதை வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தின் மூலம் பெண்களின் பொருளாதார அந்தஸ்த்தை மேம்படுத்தவதற்கான முன்மொழிவை

சமர்ப்பித்தது. விகல்பனி அவற்றின் போசணைப் பெறுமதி, காலநிலை தாங்குதிறன் மற்றும் பன்மைத்துவத்திற்கு ஏற்ப பாரம்பரிய விதைகளுக்கான கேள்வியை இனங்கண்டது. கண்டி மாவட்டத்தின் மகளிர் அபிவிருத்தி மத்திய நிலையத்தினால் (WDC) பன்வில பிரதேச செயலகப் பிரிவின் தோட்டத்துறையின் பெண்களை 'சுய உதவிக் குழுக்கள்' ஊடாக அணிதிரட்டுவதற்கு, பாற்பண்ணை உபகரணங்களை வழங்குவதற்கும், பாலுற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கான இடங்களை ஏற்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் மரக்கறிப் பயிர்ச் செய்கை உற்பத்திகளை மேம்படுத்தவும் இயற்கைப் பசளையைச் சந்தைப்படுத்துவதில் பெண் விவசாயிகளைப் பயிற்றுவிக்கப்படுவதற்குமான முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், WVL-SL மனித நேய உதவிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் தேவையை குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் ஆபாயங்களுக்கு ஆளாகக் கூடிய பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் குழுக்களில் ஏற்பட்ட சமச்சீரற்ற, சிலவேளைகளில் புலப்படாத தாக்கங்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட கோரிக்கைகள் வாயிலாக உணர்ந்து கொண்டது. இந்த நோக்கத்திற்காக WVL-SL குழு உள்ளக நீதிக் செயற்றிட்டக் குழுவிற்கு (ஆசிய மன்றத்தின் பால்நிலை மற்றும் நீதி நிகழ்ச்சிகளின் கீழ் செயற்படும் இரு குழுக்களும்) லோட்டஸ் சர்க்கிள் இமர்ஜன்சி நிதியத்தின் (ஆசிய மன்றத்தின் உள்ளக நிதி மூலம்) ஊடாக நிதியைச் சேகரிப்பதற்கு உதவியது. இப்பொருளாதார நெருக்கடியில் அவர்களுடைய சமூகங்களில் தோன்றும் உதவித் தேவைக்கு விரைவாகப் பதிலளிப்பதற்கு மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கியது. 'இலங்கையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான பொருளாதார நிவாரணப் பொதி' அவசர உதவித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் WVL-SL, மகளிர் உரிமை நிறுவனங்களிடையே விநியோகிக்கப்பட்டது. இந்த உதவியானது வீட்டுத் தோட்டம் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காக பொருளாதார உதவித் தொகைக் கொடுப்பனவொன்றையும் விதைகளடங்கிய பொதியொன்றையும் உள்ளடக்கியதாக அமைந்தது. இத்துடன், மகளிர் உரிமை நிறுவனங்களால் உளச் சுகாதாரத்தின் நலன் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வீட்டு வன்முறைகள் தொடர்பான சேவைகளை வழங்குனர்களைத் தொடர்பு கொள்ளும் தகவல்கள் அடங்கிய ஆசிய மன்றத்தால் தயாரிக்கப்பட்ட பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட வீடுகளுக்கு தற்காலிக நிவாரணத்தை வழங்குவதற்கும், பெண்களுக்கு தமது நிறுவனத்திலிருந்து நிதியை தாம் விரும்பியவாறு செலவழிக்கவும், குறுகிய கால ரீதியில் தமது வீட்டில் செலவழிப்பதற்காக உதவியளிப்பதற்கும், அவர்கள் தன்னிறைவுடன் வாழவும் வாய்ப்பளிக்கப்படுதல் இந்த உதவியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்களின் வீட்டு உணவுத் தேவைகள் இடைக்கால ரீதியில் போதுமானதாக இருப்பதுடன், அதனூடாக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களும் மனிதநேய உதவிகளின் ஊடாக பெரும்பாலும் உருவாக்கப்பட்ட 'தங்கிவாழும்/நலன்புரி மீது தங்கியிருக்கும்' மனநிலையைக் குறைக்கின்றது.




தலைப்பு: விதைப்பொதிகளை 1,100 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு 15 பெண்கள் குரலும் தலைமைத்துவ பங்காளர்களான மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இத்துடன் மகளிர் உரிமை நிறுவனங்களால், மனநல சுகாதாரத்தின் நலனுக்காகவும், திடீர் உதவிக் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஆசிய மன்றத்தால் தயாரிக்கப்பட்ட பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. WVL-SL செயற்றிட்டத்தால், அவர்களின் பிரதேசங்களில் அரச தரப்பினருடன் பணியாற்றுவதற்கும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் தொடர்ந்து இடைச் செயற்பாடுகளைப் பேணுவதற்காகவும் அவசர உதவித் திட்டத்தின் ஊடாக மகளிர் உரிமை நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அரசாங்க பங்குதாரர்களுடனான இணைப்பையும் வலையமைப்புகளையும் பலப்படுத்துவதற்காக மகளிர் உரிமை நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் பொருத்தமான/ஆபத்துக்குள்ளாகக் கூடிய பெண் தலைமைத்துவக் குடும்பங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்புடைய நிலமட்டத்திலான உத்தியோகத்தர்களை (உதா: மாவட்டச் செயலகங்களில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், சமூக சேவை, விவசாய உத்தியோகத்தர்கள்) உள்ளடக்கிய தேர்வுக் குழுவை அமைத்து பெண் தலைமைத்துவத்திலான குடும்பங்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக விவசாய உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணியாற்றியது. பல்வேறுபட்ட பிரச்சனைகளை முன்னிலைப்படுத்துவதற்கும் பயனாளிகளுடன் கலந்தாலோசிக்கவும் விநியோக நிகழ்வை (நிதி உதவி, விதைப் பொதி மற்றும் தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் பயனாளிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டமை) பயன்படுத்தியதுடன், அவர்களின் பொருளாதார நெருக்கடிகளைக் கையாளும் போது அவர்களின் நிதி, குடும்பம் மற்றும் உளநலனைப் பேணுவதற்கான நடைமுறைத் திறன்களை வழங்கியது.

## நெருக்கடிகளின் போது மகளிர் உரிமை நிறுவனங்களின் நிதி, நிர்வாகத் தடைகளை நிவர்த்தி செய்தல்

### கோவிட்- 19 காலப்பகுதியில்

பெரும்பாலும் மகளிர் உரிமை நிறுவனங்களின் பங்குதாரர்களுக்கு குறிப்பாக தொற்றின் ஆரம்ப காலத்தில் செயற்றிட்டச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்பட்டாலும் மகளிர் உரிமை நிறுவனங்கள் தமது பணியாளர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கும் WVL-SL, மகளிர் உரிமை நிறுவனங்களின் செயற்றிட்டப் பணியாளர்களுக்கான சம்பளங்களும் கொடுப்பனவுகளும் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்தது. தமது பணியாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான சொந்தமான வளங்களேதும் அவர்களிடம் இல்லாத காரணத்தால் மகளிர் உரிமை நிறுவனங்களால் WVL-SLயின் இம்முயற்சிகள் பெரிதும் பாராட்டப்பட்டன. எனினும் WVL-SL, மகளிர் உரிமை நிறுவனங்களின் நிதிக் கொள்திறன்களில் வேறொரு பிரச்சனையைச் சந்தித்தது. செயற்றிட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட முடியாத சந்தர்ப்பங்களில் ஆகுசெலவற்ற நீடிப்பு ஒப்பந்தமொன்றுக்கு (NCE) முன்வருவது பொதுவான வழக்கம் என்றபோதும் MYF நிதிச் சுற்றின் 1வது கட்டத்திலிருந்து செயற்பாடுகளை முழுமையாக்குவதற்கான ஆகுசெலவற்ற நீடிப்பு ஒப்பந்தத்தை (NCE) பேணிச் செல்வதற்கு தொற்றின் பயனாக ஏற்பட்ட விளைவுகள் காரணமாக முடியாமற் போனது. இதற்கான தீர்வாக WVL-SL யால் செயற்றிட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட தீர்மானிக்கப்பட்டதுடன், தனித் தனி மகளிர் உரிமை நிறுவனங்களுடன் கலந்துரையாடி, MYF சுற்றின் 2ம் கட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வணுகுமுறையானது இரட்டிப்பு அனுகூலங்களைக் கொண்டது: அது மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை அளித்ததுடன், தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில், ஆகுசெலவற்ற நீடிப்பின் அடிப்படையில் பணிக்குழுவைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வேறு நிதி மூலங்களைத் தேடுவதற்கான சுமையையும் குறைத்தது. மகளிர் உரிமை நிறுவனங்களுக்கான நிலைபேறான நிதி நிலைமைக்கான குறைந்தபட்ச தரநிலைகளும் சிறந்த நடைமுறைகளையும் அமைப்பதற்காக கட்டாய தேவையை இப் பிரச்சனை பிரதிபலிக்கின்றது. WVL-SL தரநிலைகளைத் தாபிப்பதற்கும் நிதி மற்றும் ஒழுங்குபடுத்தற் செயல்முறைகளைத் தயாரிப்பதற்கும் உதவியாக அமைந்த அமைப்பின்

நிதி மதிப்பீடொன்றின் ஊடாக ஒரு நிறுவனத்துடன் (மாற்றுத் திறனாளிப் பெண்கள் சங்கம் அனுராதபுரம் - AKASA) இதனை ஆரம்பித்தது.

### பொருளாதார நெருக்கடியின் போது

பணவீக்கத்தின் காரணமாக செலவுகளின் கடுமையான அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடியின் உடனடி விளைவுகளில் ஒன்றாக அமைந்தது. வளர்ந்து வருகின்ற சூழ்நிலைக்கேற்ப, பங்குதாரர்களின் வரவுசெலவுத் திட்டங்களைத் திருத்த வேண்டிய தேவை இருந்தது. WVL-SL இதில் ஒவ்வொரு சம்பவமாக அணுகும் முறையைக் கையாண்டு, வரவு செலவுத் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது (குறிப்பாக போக்குவரத்தில்) இந்த மாற்றங்களை பிரதிபலிப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்குகின்ற போது பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றியது.

## சூழ்நிலைக்கு ஏற்றவாறு பங்காளர் கண்காணிப்பு முறைகளை இற்றைப்படுத்தல்

செயற்றிட்டத்தின் ஊடான பங்குதாரர் கண்காணிப்பு பிரதான மாதிரியாக அமையுமாறு பங்குதாரர் விஜயங்கள் திட்டமிடப்பட்டன. எவ்வாறாயினும் கோவிட்-19ன் விளைவாக பயண எல்லைகள் கருத்திற் கொள்ளப்பட்டு WVL-SLயால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ‘தனிநபர் பங்குதாரர் கலந்துரையாடல்கள்’ கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. தனிநபர் பங்குதாரர் கலந்துரையாடற் கருவியானது WVL-SLக்கு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதிகளில் பெண்ணுரிமையை மேம்படுத்துவதில் பங்குதாரர்களின் அனுபவங்கள், முகங்கொடுக்கின்ற சவால்களையும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்காகப் பின்பற்றப்படும் உத்திகளையும் புரிந்து கொள்ள இடமளித்ததுடன், WVL-SL யின் செயற்பாடுகள் பயனுள்ளதாக அமைந்தனவா என்பதைப் புரிந்து கொள்ளவும் நிறுவன ரீதியான முகாமை, ஒழுங்குபடுத்தல், ஆதரித்து வாதாடுதல் மற்றும் சேவை வழங்கல் என்பவற்றுடன் வலையமைப்பு தொடர்பில் பங்குதாரர் அமைப்பின் கொள்திறன், தேவைகள் மற்றும் கொள்திறன்களை முன்னுரிமைப்படுத்தி கலந்துரையாடவும் வழிகோலியது.

## எதிர்பாராத விளைவுகளும் அடைவுகளும்

### இலக்குப் பயனாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

பயனாளிகளின் எண்ணிக்கையை அடைய முடியாமற் போகலாம் என மகளிர் உரிமை நிறுவனங்கள் எதிர்பார்த்திருந்த நேரத்தில், இலங்கையில் கோவிட்-19 சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் அவர்களின் பணிகளை மாற்றியமைத்ததன் பயனாக ஐந்து மகளிர் உரிமை நிறுவனங்கள் அவர்களின் திட்டத்திற்குள் உட்படாத பயனாளிகளின் எண்ணிக்கையை அடைய முடிந்தது. பொதுவாக சிங்கள மொழி பேசும் ஏற்றுமதி செயல்முறை வலயத்தின் (EPZ) ஊழியர்களுடன் பணியாற்றும் காலி மாவட்டத்திலுள்ள பெண்கள் மத்தியநிலையம், உள்ளக வளங்களைப் பாவித்து மேலதிக நேர வேலை தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகள் பற்றிய பிரசுரங்களை மொழிபெயர்த்து விநியோகித்ததன் மூலம் கட்டுநாயக்க ஏற்றுமதி செயல்முறை வலயத்தினதும் வவுனியா மாவட்டத்தின் தமிழ் பேசும் ஊழியர்களையும் அடையக் கூடியதாக இருந்தது. வவுனியா மாவட்டத்தின் கிராமிய பெண்கள் அமைப்பு (RWF) வவுனியா பிரதேச செயலகத்தின் பிரதேச மகளிர் அபிவிருத்திப் பிரிவின் அரச உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைப்புடன் கிராமத்தில் (பாடசாலைகள் மூடப்பட்ட காரணத்தால் பாடசாலைகளுக்குப் பதிலாக) விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை நடத்தியதில் அதிக எண்ணிக்கையிலான பெண்களையும் பெண் பிள்ளைகளையும் அணுக முடிந்தது. முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியம் (MWDT) தொற்றுக் காலத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்ததால், ஆற்றுப்படுத்தல் மற்றும் சட்ட உதவிகளைக் கோரும் பயனாளிகளின் எண்ணிக்கையைப் பதிவிட்டுள்ளது.

இலங்கையின் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான பொருளாதார நிவாரணப் பொதியின் உடனடி உதவிகள் மூலம் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 15 மகளிர் உரிமை நிறுவனங்களுக்கு பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பிலான பணக் கொடுப்பனவுகளும் விதைப் பொதி தொடர்பான தகவல்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சுமார் 1,150 பெண்களைச் சென்றடைந்தது. லோட்டஸ் சர்க்கிள் இமர்ஜன்சி நிதியத்துடன் இணைந்த இவ்வுடனடி உதவிகள் மூலம் WVL-SL யின் நேரடிப் பயனாளிகளின் (பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்) பிரிவையும் மறைமுகப் பயனாளிகள் (குழந்தைகள், முதிய பெற்றோர்/உறவினர்களும் மாற்றுத் திறனாளிகளும்/வலது குறைந்த கணவர்கள்/நண்பர்கள் உட்பட) என்ற புதிய பிரிவொன்றையும் அடைய முடிந்தது.

## WVL-SL க்கு அப்பாலான மகளிர் உரிமை நிறுவனங்களின் மேம்படுத்தப்பட்ட திறன்களும் பெண்களை வலுப்படுத்துவதற்கான முன்னுரிமையும்

WVL-SL அரசியல் நெருக்கடிகளின் போதும் 'அரகலய'வின் போதும் (போராட்டம்) (இலங்கை அரசாங்கத்தின் ஊழல் மற்றும் வினைத் திறனின்மைக்கு பதில் கோரும் வகையில் பிரசைகளின் இயக்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கும் அவரது தலைமை மற்றும் குடும்பத்திற்கு எதிராக தொடங்கப்பட்ட இயக்கம்) மகளிர் உரிமை நிறுவனங்களின் ஈடுபாட்டை இனம் கண்டது. WVL-SL அரசியல் செயற்பாட்டிலோ அல்லது அதன் நிதி அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் மூலம் அரசியல் நெருக்கடியின் போது மகளிர் உரிமை நிறுவனங்கள் ஆற்றிய பணிகளுக்கு நேரடியான ஒத்துழைப்பை வழங்காவிடினும், WVL-SL அரசியற் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்புக் குறைவாகக் காணப்படுவதால் மகளிர் உரிமை நிறுவனங்கள் தமது செயற்பாட்டிற்குள் பெண்ணியக் கொள்கைகளை இணைத்துக் கொள்வதில் எடுத்த முயற்சிகளை ஏற்றுக் கொள்கின்றது. பங்குதாரர்கள் ஏனைய அமைப்புகளுடனும் செயற்பாட்டாளர்களுடனும் முறைசார்ந்த மற்றும் முறைசாரா வலையமைப்புகளைக் கட்டியெழுப்பி, மக்களிடையே அவர்களின் புலப்படும் தன்மையை அதிகரித்து, அவர்களின் செயற்பாட்டில் அதிக எண்ணிக்கையிலான பெண்களை உள்ளடக்கியும் அவர்களின் செயற்பாட்டில் பெண்ணுரிமைகளை ஏற்றுக் கொள்ளவும் தூண்டினர்.

In partnership with Canada

The Asia Foundation

**செயற்றிட்டத்தைப் பற்றி:** பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம், இலங்கை செயற்றிட்டமானது கனேடிய அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டு ஆசிய மன்றத்தின் இலங்கை அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்செயற்றிட்டமானது, பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுப்படுத்துவதற்காகவும், பெண்கள் மற்றும் சிறுமிகளினது உரிமைகளையும் பாதுகாப்பினையும் மேம்படுத்துவதற்காகவும் பால்நிலை சமத்துவத்தை அடைவதற்கும் எதிர்பார்க்கின்ற உள்ளூர் பெண்தலைமைத்துவமுடைய மகளிர் உரிமை நிறுவனங்கள் மற்றும் இயக்கங்களின் இயலுமை விருத்தி செய்தலையும் அவர்களின் செயற்பாடுகளுக்கு உதவி செய்தலையும் நோக்கமாகக் கொண்டது.

**ஆவணத்தைப்பற்றி:** பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம், இலங்கை செயற்றிட்டமானது அதன் செயலமர்வுகள், பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளை இந்த ஆவணத்தினைப் போன்றே 'ஆவண சுருக்கங்களாக்கி' தொடராக ஆவணப்படுத்துகிறது. இவ்வாவணங்களானது நிகழ்ச்சியின் உள்ளடக்கத்தை சுருக்கமாக குறிப்பாக்குவதோடு, முக்கிய கலந்துரையாடல்களை அவதானப்படுத்தி அடுத்த நடவடிக்கைகளையும் குறிக்கிறது. அத்துடன் செயற்றிட்டத்தின் முழுமையான நோக்கத்திற்கும் இலக்கிற்கும் ஆற்றிய பங்களிப்பினையும் முக்கியத்துவப்படுத்துகிறது. மேலும் செயற்றிட்டத்தின் வலையமைப்பு மற்றும் பங்காளர்களான மகளிர் உரிமை நிறுவனங்களிலுள்ள பெண்களின் குரல்களையும் உள்ளடக்குகிறது.

**பெண்களின் குரல் மற்றும் தலைமைத்துவம் - இலங்கை**
ஆசிய மன்றம்
30/1இ பகத்தலே வீதிஇ கொழும்பு 3.
தொலைபேசி: +94 11 2058701 Email: wvl@asiafoundation.org